முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.08.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்கார தவசியே தேசிகா
இங்கனமே உன் பெருமை கூறி
இயம்பிடுவேன் அருளாசி தன்னை
2. தன்னையே சுபகிருது யாளி திங்கள்
தக்கதொரு உபய திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 02 நாள், 18.08.2022 வியாழக்கிழமை)
நன்னயமாய் முனையடுவார் நாயனாரும்
நாட்டிடுவேன் உலககோர் நலம்பெற
3. நலம்பெற ஞானிகள் பூசைதனை
நாடெங்கிலும் செய்யும் வண்ணம்
சலனமற சற்குருவாய் அருளும்
சன்மார்க்க அரங்கன் வழிகளை
4. வழிகளை வணங்கி மக்கள்
வரவேற்று பின்பற்றி வர
தெளிவிலா குழப்ப நிலை விலகி
தெரியவரும் ஞானபலம் வாழ்வில்
5. வாழ்வினில் அரங்கன் நிழலில்
வாழும் மக்களுக்கு சடுதி
ஊழ்அகன்று நல்வினை கூடும்
உயர்வும் நல்வாழ்வும் காணும்
6. காணவே அவரவர் விரும்பும்
காப்புநிறைந்த பணியும் சிறப்பும்
ஞானவான் ஆகவே ஆற்றல் கூடும்
நல்ல தேற்றமும் கண்டு சிறப்பர்
7. சிறப்புதரும் தலைமை முனியோடு
சுப்பிரமண்யப்பெருமான் துணை
அறத்தின் மூலம் கொண்ட ஞானி
அரங்கன் அருளாசி பெற்ற மக்களுக்கு
8. மக்களுக்கு மரணம் வெல்லும்
மகத்துவமும் ஆற்றல் கூடும்
தேக்கமின்றி வாழும் காலமே
தெய்வ பலம் சகலவளமும் கண்டு
9. கண்டுமே உலகை மாற்றும்
கலிவெல்லும் ஞானிகள் ஆக
தொண்டுவழி உலகோர் உயர்வர்
தூயவான்களாக ஞான ஆட்சி அமைய

10. அமைய உண்டான அற்புதம் புரிவர்
அரங்கமகான் வழி வழியாக
அமைதிமிக்க ஞானப் படைகள்
அகிலமெங்கும் நிரம்பி இனிதே

11. இனிதே ஞானயுகம் படைப்பர்
எல்லா வல்லமையும் கண்டுமே
கனிவேலவன் தலைமை ஏற்ற
கருணைமிக்க ஞான ஆட்சி தருவர்
அருளாசி முற்றே

–சுபம்–